# பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற தொடர்புகள்


amazon future engineer



புதிய நபர்களைச் சந்திப்பதையும் பல்வேறு செயல்பாடுகளை ஆராய்வதையும் அடில் விரும்புகிறார். ஆனால் ஆன்லைனில் பாதுகாப்பாக இருப்பது மிகவும் முக்கியம் என்பதை அவர் அறிவார். நண்பர்களுடன் பழகும் போதும் புதிய அறிமுகங்களை உருவாக்கும் போதும் அத்தகைய தொடர்புகளின் ஊடாகப் புத்திசாலித்தனமாக எப்படி கடந்து செல்வது என்பதை உறுதிசெய்ய விரும்புகிறார்.

தனது நலனில் அக்கறை இல்லாதவர்களை ஒதுக்கி நட்புணர்வு கொண்ட நம்பகமானவர்களை எவ்வாறு அடையாளம் காண்பது என்பதைக் கற்றுக்கொள்ள அவருக்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது!


இணையம் என்பதுபல்வேறு பகுதிகளைக் கொண்ட ஒரு பெரும் நகரம்என்று கற்பனைசெய்து கொள்ளுங்கள். ஒவ்வொரு இடத்திற்கும் அதனதன் நோக்கம் உள்ளது. எதார்த்த வாழ்க்கையில் நீங்கள் பார்க்கும் இடங்களைப் போலவே இந்த இடங்களைப் பற்றிபுரிந்துகொள்ளும்போது எங்குசெல்ல வேண்டும், யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும்என்பதுகுறித்துப்பாதுகாப்பானதேர்வுகளைஉங்களால்செய்யமுடியும்.





மேலும் ஒரு நகரத்தைப் போலவேஇதிலும் ஆபத்துகள் உள்ளன: ஆன்லைனில் இயங்குபவர்கள் இரக்கமற்றவர்களாக இருக்கலாம், உங்களை ஏமாற்ற முயற்சி செய்யலாம் அல்லதுதனிப்பட்ட தகவலைத் திருடலாம். அப்போதுதான் உங்கள் உள் சமிக்ஞை செயல்படுகிறது - நீங்கள் ஆன்லைனில் எதிர்கொள்ளக்கூடிய ஆபத்துகளைப் புரிந்துகொள்வதன் மூலமும் அவற்றின் அறிகுறிகளை அறிந்து கொள்வதன் மூலமும் தேவைப்படும்போது நீங்கள் எச்சரிக்கை உணர்வோடு செயல்படலாம்.

# பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பு இல்லாததொடர்புகள்


அடிலின் அனுபவங்களைப் பார்த்து எவை பாதுகாப்பற்றவை எவை பாதுகாப்பானவை மேலும்எதற்கு எச்சரிக்கை தேவை என்பதைஅடையாளம் காண முடியுமா?



பாதுகாப் பற்றவை



எச்சரிக்கை தேவை



பா து கா ப் பா ன வை

·யாரோ ஒருவர்அடிலுக்கு இலவசஹெட்ஃபோன்களை வழங்குவதாக செய்தி அனுப்பியுள்ளார்.

·அடில் தனதுவகுப்புத் தோழனுடன் கண்ணியமாக உரையாடினார். அதில் அவர்கள் திரைப்படங்களைப் பரிந்துரைப்பது பற்றி பேசிக்கொண்டனர்.

·அடிலின் சகோதரிவீடியோ அழைப்பில் அவரது புதியதொலைபேசியைக் காட்டுவதற்காக அவரை அழைத்தார்.

·அடிலின் பக்கத்து வீட்டுக்காரர் அவரதுஆதார் எண்ணையும் அவரது தந்தையின் வங்கி விவரங்களையும் உடனடியாகப் பகிருமாறு கோருகிறார்.

·அடிலின் வகுப்புத் தோழர்கள் சிலர்அவர் பயனற்றவர் என்றும் பள்ளிக்கு வருவதை நிறுத்த வேண்டும் என்றும் அவருக்கு மோசமானசெய்திகளை அனுப்புகிறார்கள்.

·அவரது பெற்றோரின் வழிகாட்டுதலின் கீழ், ஆன்லைன் மல்டிபிளேயர் கேம் விளையாட்டில் இலங்கையைச் சேர்ந்த ஒரு வீரர்சண்டைக் காட்சியின் போது அவருக்கு உதவினார்!

·அடிலின் சமூகஊடகத்தைப் பின்தொடரும் ஒருவர் தினமும் மதியம் 2 மணிக்கு அருகில் இருக்கும் பூங்காவிற்கு வருமாறு அழைக்கிறார். மேலும் இதை அவரதுகுடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறார்.

·அடிலுக்கு அறிமுமான ஒருவர் அவரதுநண்பரைப் பற்றியரகசியத்தை வெளிப்படுத்த அவரைக் கட்டாயப்படுத்துகிறார்.

·அடிலுக்கு நன்றாகஅறிமுகமில்லாத ஒருவர்திடீரென்று மிகவும் நட்புணர்வுடன் பழகத்தொடங்குகிறார். மேலும் அருக்கு அடிலைப் பற்றி நிறையதெரிந்திருக்கிறது.

·அடிலின் குடும்ப நண்பர் எந்தக்காரணமும் இல்லாமல் வேறு ஒரு செயலியில் அவருக்குச் செய்தி அனுப்பச் சொல்கிறார். ஆனால் அதற்கான காரணத்தைச் சொல்லவில்லை.

# சந்தேகத்திற்குரியதுஎன்றால்என்ன என்பதைப்பற்றிஅறிந்துகொள்ளுங்கள்!

amazon future engineer




## டிஜிட்டல் துப்பறிவாளர் அகாடமியில் சேருங்கள்!

நீங்கள் துப்புதுலக்க வேண்டிய நேரம்இது. இன்று நீங்கள் சந்தேகத்திற்கிடமான ஆன்லைன் நடத்தையைக் கண்டறிய பயிற்சி பெறுவீர்கள். நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: ஆன்லைனில் உள்ளஅனைவருமே உங்களைஏமாற்ற முயற்சி செய்யவில்லை. ஆனால் எச்சரிக்கை அறிகுறிகளை அறிந்துகொள்ளும்போது நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள்!

## ஆன்லைனில் மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது கவனிக்க வேண்டிய சில பொதுவான விஷயங்கள் வருமாறு:



- முடிவுகளை எடுக்கும்படி உங்களை அவசரப்படுத்துதல்.
- உண்மையாக இருக்கமுடியாத அளவுக்கு மிகவும் நல்லதாகத் தோன்றும் விஷயங்களை வழங்குதல்.
- பணம் அல்லதுபுகழ் பற்றியபெரும் வாக்குறுதிகளை வழங்குதல்.
- அவர்களுக்கும் உங்களுக்கும் ஒரு சிறப்பான தொடர்பு இருப்பதாகக் கூறுதல்.



- ஆன்லைன் குழுக்கள் அல்லது விளையாட்டுகளில் இருந்து மக்களைவிலக்குதல்.
- வதந்திகளைப் பரப்புதல் அல்லது தனிப்பட்ட தகவலைப் பகிர்தல்.
- பெற்றோர்/நம்பகமான பெரியவர்களிடம் ரகசியங்களைக் கூறாமல் இருக்கும்படி கூறுதல்



- தனிப்பட்ட தகவல்அல்லது புகைப்படங்களைக் கோருதல்.
- ஒருவர் எப்படிஇருக்கிறார், செயல்படுகிறார் அல்லதுபேசுகிறார் என்பதுகுறித்து மோசமானகருத்துகளைச் சொல்லுதல்.
- அச்சுறுத்தும் செய்திகளை அனுப்புதல்.



## சூழ்ச்சியைக்கண்டறியும்சவால்



கடந்த மாதத்தில் அடில் பெற்றசில செய்திகளைப் படித்து, நீங்கள் கண்டறிந்த அனைத்து சூழ்ச்சியான செயல்களையும் மனதுக்குள் அடையாளம் காண முடியுமா?

Cool_Gamer123: புதிய சூப்பர் குவெஸ்ட் கேமைப்பெற்றீர்களா?

அடில்: இன்னும் இல்லை. அதற்காகச் சேமித்துக் கொண்டிருக்கிறேன்!

நான் உங்களுக்கு ஒரு இலவச நகலைப் தர முடியும்!

ஆனால் யாரிடமும் சொல்க்கூடாது. அது நம் இருவருக்கும் இடையிலான ஒரு ரகசியம்

அதை அனுப்புவதற்கு உங்கள் வீட்டுமுகவரியைச் கூறுவீர்களா?

நந்தன்: யாராவது கணித வீட்டுப்பாடத்தை முடித்திருக்கிறார்களா?

அடில்: மாலை ५ மணிக்கு அதைச்செய்யப் போகிறேன்!

அனு: நந்தனுக்கு யாரும் உதவமாட்டார்காள்! அவன் மிகவும் முட்டாள்...

ஜடின்: ஆமாம், தவறான பதில்களைப் பகிர்ந்து கொள்வோம்🤣

நந்தன்: தயவுசெய்து நிறுத்துங்கள்..

அனு: என்ன, நீ ஆசிரியரிடம் சொல்வாயா?

BuildMaster_Kai: இன்றைய பில்டிங் சவாலுக்கு வாங்க!

அடில்: வணக்கம்! நான் முதல்முறையாகச் சேருகிறேன்

டேவிட்: வரவேற்கிறோம்! இன்று நாங்கள் மர வீடுகளைக் கட்டுகிறோம்

அடில்: எனக்குக் கட்டுமானத்தில் திறமைஇல்லை!

அர்ஜுன்: கவலைப்படாதே! நான் சில குறிப்புகளைப் பகிர்ந்து கொள்கிறேன்... எல்லோரும் ஏதாவது ஓர் இடத்தில் இருந்துதான் தொடங்குகிறார்கள்.

# பாதுகாப்பானமற்றும்பாது காப்புஇல்லாததொடர்புகள்

amazon future engineer

## சந்தேகத்திற்குரியசுயவிவரங்களைக்கண்டறியவும்

அச்சம் இல்லாமல் அடையாளங்களைப் பற்றிதுப்புதுலக்கும் ஒரு நபராக சந்தேகத்திற்குரிய சுயவிவரங்களைக் கண்டறிவது உங்கள் வேலை! கீழே உள்ளசுயவிவரங்களை மதிப்பாய்வு செய்து ஆபத்தைஉணர்த்தும் சுயவிவரங்களைக் கண்டறியவும். உங்கள் கண்டுபிடிப்புகளைப் பற்றிசிந்திக்க உங்கள்கூர்மையான துப்பறியும் திறன்களைப் பயன்படுத்தவும்.





@SaraBhatt

தனியார் கணக்கு

📖 மத்திய உயர்நிலைப் பள்ளி '27

💁 வாழ்க. அன்பு. சிரிக்கவும்!

புத்தகங்களைப் படித்தல், பாடல்களைப் பாடுதல்



@RobotGamer2050

வணிகக் கணக்கு

இலவச நாணயங்களுக்கு BEEP BEEP DM!!!!

🕹️ 🎮




@moneybagsgetrichher78_

பொதுக் கணக்கு

பணம் அனுப்புங்கள்! விரைவாக பணக்காரர்களாகுங்கள்! மாணவர்களுக்கு சிறந்தவாய்ப்பு!!!!

🛒 🛍️



@MeenaMathur2020_

பொதுக் கணக்கு

📌 புது தில்லி/நியூயார்க்

ஒரு நேரத்தில் ஒரு காபி!

இணையத்தில் உலாவும்போது கவனமாகசிந்திக்க உதவும்கேள்விகளின் பட்டியல் இதோ. புதிய சுயவிவரத்தைப் பார்க்கும்போதோ அல்லது உங்களுக்குத் தெரியாத ஒருவரிடம் இருந்து செய்திவரும்போதோ இந்தப்பட்டியலைப் பயன்படுத்தவும். இந்தக் கேள்விகளை நீங்களே கேட்டுக்கொள்வது நீங்கள் பாதுகாப்பாக இருக்கவும் ஆன்லைனில் புத்திசாலித்தனமான தேர்வுகளைச் செய்யவும் உதவும்.


- சுயவிவரத் தகவல்: சுயவிவரத்தில் மிகக்குறைந்த தகவல்கள் உள்ளதா, அல்லது அது விரைவாக ஒன்றிணைக்கப்பட்டதாகத் தோன்றுகிறதா?
- புஷ் செய்திகள்: அவர்கள் பணத்தையும் தனிப்பட்ட விவரங்களையும் கேட்டு செய்திகளை அனுப்புகிறார்களா அல்லது உங்களை அவசரப்படுத்துகிறார்களா?
- சீரற்ற தகவல்: சுயவிவரத் தகவல் பொருந்தவில்லையா (ஒரு மாணவர் என்று கூறிக்கொண்டு வணிக ஒப்பந்தங்களை வழங்குவது போல)?
- உண்மையாக இருக்கமுடியாத அளவுக்கு மிகவும் சிறப்பான சலுகைகள்: "இலவச" பொருட்கள், பணம் அல்லதுஉண்மையாக இருக்கமுடியாத அளவுக்கு மிகவும் சிறந்ததாகத் தோன்றும் வாய்ப்புகளை சுயவிவரம் வழங்குகிறதா?

# உங்கள்பாதுகாப் பைஉறுதிசெய்யு ங்கள்

amazon future engineer

பாதுகாப்பற்ற சூழ்நிலைகளை எதிர்கொள்ளும்போது நாம்பதட்டமும் அச்சமும் அடைவோம். நம்மை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது என்பதைஅறிவது முக்கியமானதாகும்! உங்கள் ஆன்லைன் பாதுகாப்பு சூப்பர் பவர்களை அடையாளம் காண உங்கள்குறிப்பேட்டில் இந்தவிளக்கப்படத்தை வரைந்து அதை நிரப்பவும்!

## உங்கள்ஆன்லைன்பாதுகாப்புசூப்பர்பவர்கள்



நீங்கள் மையத்தில் இருப்பதாக கற்பனைசெய்து பாருங்கள். உங்களைச் சுற்றி, மூன்று அடுக்கு பாதுகாப்பு உள்ளது.

முதல் மற்றும் மிக நெருக்கமான அடுக்கு உள் ஆற்றல். யாராவது உங்களைப் பாதுகாப்பு இல்லை என்றுஉணர வைத்தால், அமைதியாகவும், பாதுகாப்பாகவும், மேலும் பத்திரமாகவும் உணர நீங்களே செய்யக்கூடிய ஐந்து விஷயங்களை எழுதுங்கள்.

எல்லாவற்றையும் உங்களால் மட்டுமே தீர்த்துவிட முடியாது! இரண்டாவது அடுக்கு நம்பிக்கை வட்டம் என்றுஅழைக்கப்படுகிறது. உங்களைப் புரிந்துகொள்ளும், ஆன்லைனில் ஏதாவது தவறுநடந்தால் உங்களுக்கு உதவ நீங்கள் தொடர்பு கொள்ளக்கூடிய மூன்று தெரிந்த நபர்களை (குடும்பத்தினர் அல்லதுநண்பர்கள்) எழுதுங்கள்!

சில நேரங்களில், உங்களுக்கு கிடைக்கக்கூடிய அனைத்து ஆதரவும் உங்களுக்குத் தேவைப்படும்! கடைசி அடுக்கு பாதுகாப்பைத் தேடுதல் என்று அழைக்கப்படுகிறது. உதவிக்காக உங்கள்நம்பிக்கை வட்டத்திற்கு வெளியில் நீங்கள் தொடர்புகொள்ளக்கூடிய மூன்றுநேரடியான இடங்கள், வலைத்தளங்கள் அல்லதுநபர்களைப் பற்றிசிந்தித்து குறித்துவைத்துக் கொள்ளுங்கள்.




### உதவிக்குறிப்புகள்!

தொடர்புகள்பாதுகாப்பற்றதாகஇருக்கும்போதுஎடுக்கவேண்டியசில படிகள்இங்கே:

- உங்களிடம் அடாவடித்தனத்தில் ஈடுபடும் அல்லதுஉங்களை ஏமாற்றமுயற்சி செய்யும் நபர்களைத் தடுத்து புகார் அளிக்கவும்.
- ஆதரவுக்காக உங்கள்நம்பகமான வட்டத்தைத் தொடர்பு கொள்ளுங்கள் - மன அழுத்தத்தைச் சமாளிக்க உங்களுக்கு உதவ நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் ஆலோசகரை நீங்கள் பட்டியலிடலாம்.
- தீங்கு விளைவிக்கும் கருத்துகளின் ஸ்கிரீன் ஷாட்களை எடுக்கவேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அனைத்து தேதிகள் மற்றும் விவரங்களையும் ஆவணப்படுத்துங்கள் - நீக்குவதும் மறப்பதும் நல்லது என்றுநீங்கள் நினைத்தாலும் கூட! ஆதாரம் ஆற்றல் வாய்ந்தது!
- உங்கள் நண்பர்களின் பட்டியலை மதிப்பாய்வு செய்து உங்களையார் தொடர்பு கொள்ளலாம் என்பதைக் கட்டுப்படுத்த செயலிகளில் தனியுரிமை அமைப்புகளைப் பயன்படுத்தவும்.
- உங்கள் நண்பர்கள் பாதுகாப்பற்றவர்களாக உணர்ந்தால் அவர்களை ஆதரித்து அவர்களுக்காகப் போராடுங்கள், ஆன்லைனில் அன்பாகநடந்துகொள்ளுங்கள்!

# பதில்களின்திறவுகோல்

யாரோ ஒருவர்அடிலுக்கு இலவசஹெட்ஃபோன்களை வழங்குவதாக செய்தி அனுப்பியுள்ளார்.

அடில் தனதுவகுப்புத் தோழனுடன் கண்ணியமாக உரையாடினார், அங்கு அவர்கள் திரைப்படங்கள் பற்றியபரிந்துரைகளைப் பரிமாறிக் கொண்டனர்.

அடிலின் சகோதரிதனது புதியதொலைபேசியைக் காட்டவீடியோ அழைப்பு விடுத்தார்.

அடிலின் பக்கத்து வீட்டுக்காரர் உடனடியாக அவரது ஆதார்எண்ணையும் அவரதுதந்தையின் வங்கிவிவரங்களையும் பகிர்ந்து கொள்ளுமாறு கோருகிறார்.

அடிலின் வகுப்புத் தோழர்கள் சிலர், அவர் பயனற்றவர் என்றும் பள்ளிக்கு வருவதை நிறுத்த வேண்டும் என்றும் அவருக்கு மோசமானசெய்திகளை அனுப்புகிறார்கள்.

அவரது பெற்றோரின் வழிகாட்டுதலின் கீழ், ஆன்லைன் மல்டிபிளேயர் கேம் ஆடும்போது இலங்கை வீரர்ஒருவர் சண்டைக் காட்சியில் அவருக்கு உதவினார்!

அடிலின் சமூகஊடகத்தைப் பின்தொடர்பவர் தினமும் மதியம் 2 மணிக்கு அருகில் இருக்கும் பூங்காவிற்கு வருமாறு அழைக்கிறார், மேலும் இதை அவரது குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்ளவேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறார்.

அடிலுக்கு அறிமுகமான ஒருவர் அவரதுநண்பரைப் பற்றியஒரு ரகசியத்தை வெளிப்படுத்த அவரைகட்டாயப்படுத்துகிறார்.

அடிலுக்கு அதிகமாகத் தெரியாத ஒருவர்அவரிடம் திடீரென்று மிகவும் நட்பாகப் பழகத் தொடங்குகிறார். மேலும் அவர்அடிலைப் பற்றிநிறைய அறிந்திருக்கிறார்.

அடிலின் குடும்ப நண்பர் ஒருவர்வேறு ஒரு செயலியில் அவருக்கு செய்தி அனுப்பச் சொல்கிறார். அதற்கான காரணத்தையும் அவர்கூறவில்லை.

**உண்மையாக இருக்க முடியாத அளவுக்கு சிறந்த விஷயங்களை வழங்குதல் (இலவச விளையாட்டு) மற்றும் தனிப்பட்ட தகவலைக் கேட்பது (வீட்டு முகவரி)**

Cool_Gamer123: புதிய சூப்பர் குவெஸ்ட் கேமைப்பெற்றீர்களா?

அடில்: இன்னும் இல்லை. அதற்காகச் சேமித்துக் கொண்டிருக்கிறேன்!

நான் உங்களுக்கு ஒரு இலவச நகலைப் தர முடியும்!

ஆனால் யாரிடமும் சொல்க்கூடாது. அது நம் இருவருக்கும் இடையிலான ஒரு ரகசியம்

அதை அனுப்புவதற்கு உங்கள் வீட்டுமுகவரியைச் கூறுவீர்களா?

**ஒருவரைப் பற்றி மோசமான கருத்துக்களைக் கூறுதல் மேலும் மற்றவர்களுக்கு உதவ வேண்டாம் என்று கூறி ஆன்லைன் குழுவில் இருந்து மக்களை விலக்குதல்.**

நந்தன்: யாராவது கணித வீட்டுப்பாடத்தை முடித்திருக்கிறார்களா?

அடில்: மாலை ५ மணிக்கு அதைச்செய்யப் போகிறேன்!

அனு: நந்தனுக்கு யாரும் உதவமாட்டார்காள்! அவன் மிகவும் முட்டாள்...

ஜடின்: ஆமாம், தவறான பதில்களைப் பகிர்ந்து கொள்வோம்🤣

நந்தன்: தயவுசெய்து நிறுத்துங்கள்..

அனு: என்ன, நீ ஆசிரியரிடம் சொல்வாயா?

**சூழ்ச்சி இல்லை!**

BuildMaster_Kai: இன்றைய பில்டிங் சவாலுக்கு வாங்க!

அடில்: வணக்கம்! நான் முதல்முறையாகச் சேருகிறேன்

டேவிட்: வரவேற்கிறோம்! இன்று நாங்கள் மர வீடுகளைக் கட்டுகிறோம்

அடில்: எனக்குக் கட்டுமானத்தில் திறமைஇல்லை!

அர்ஜுன்: கவலைப்படாதே! நான் சில குறிப்புகளைப் பகிர்ந்து கொள்கிறேன்... எல்லோரும் ஏதாவது ஓர் இடத்தில் இருந்துதான் தொடங்குகிறார்கள்.

@SaraBhatt
தனியார் கணக்கு
📖 மத்திய உயர்நிலைப் பள்ளி '27
💁 வாழ்க. அன்பு. சிரிக்கவும்!
புத்தகங்களைப் படித்தல், பாடல்களைப் பாடுதல்

@RobotGamer2050
வணிகக் கணக்கு
DANGER
இலவச நாணயங்களுக்கு BEEP BEEP DM!!!!
🕹️ 🎮

@moneybagsgetrichher78_
பொதுக் கணக்கு
DANGER
பணம் அனுப்புங்கள்! விரைவாக பணக்காரர்களாகுங்கள்! மாணவர்களுக்கு சிறந்தவாய்ப்பு!!!!
🛒 🛍️

@MeenaMathur2020_
பொதுக் கணக்கு
பொதுக் கணக்கு
📌 புது தில்லி/நியூயார்க்
ஒரு நேரத்தில் ஒரு காபி!